JK & SK

# பேச்சு

**(இளமழலை - முதுமழலை)**

## நான் ஒரு தமிழ்க் குழந்தை

தமிழ் அன்னை தந்தாள் பல்லாயிரம் குழந்தைகள். அவர்களுள் நானும் ஒரு குழந்தை. தமிழோடு பிறந்தேன், தமிழோடு வளர்ந்தேன். என் வாழ்க்கையில் தமிழ் மணம் கமழும்.

பிறந்த நாள் முதல் என் பெற்றோர் தமிழ் அமுதம் ஊட்டி வளர்த்தனர். பாரதியாரின் பாப்பாப் பாட்டுப் பாடி என்னை மகிழ்வித்தனர். தாலாட்டுப் பாடி தூங்க வைத்தனர். என் குறுகுறு நடையையும் மழலைச் சொற்களையும் பார்த்தும் கேட்டும் இன்புற்றனர்.

புலவர்கள் இயற்றிய குழந்தைப் பாடல்களைக் கற்றேன். ஔவைப்பாட்டியின் ஆத்திசூடிப் பாடல்கள் பயின்றேன். நான் வளர என் தமிழ் அறிவும் வளர்ந்தது. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பது போல் பெற்றோர், பெரியோர் என்போரின் அறிவுரைகள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன.
நானும் வளர்ந்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பேன்.

வாழ்க தமிழ் மொழி!

நன்றி வணக்கம்.